*20*

# கூட்டத்தின் புயல்[1]

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #7*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*[2]
   A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
   B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
   C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வு நாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
   D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
   E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*

### அறிமுகம்

*இயேசு தமது மாபெரும் கலிலேய ஊழியத்தைத் தொடர்ந்தபோது, அவரது பிரபலத்தன்மை அதிகரித்தது. அவரது பிரசங்கித்தலைக் கேட்கவும் குணமாக்குதலை நாடவும் கூட்டங்கள் அவரிடத்தில் வந்தன. இந்தப் பாடத்தில் எடுத்துரைத்து முடிக்கப்படும் காலத்தின்போது, அவர் தமது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து, நினைவுகூரத்தக்க தமது மலைப்பிரசங்கத்திற்கான காட்சி அமைப்பை அமைத்திருந்தார் - இதைப் பற்றி நாம் அடுத்த வரும் இரு பாடங்களில் படிக்கவிருக்கின்றோம்.*

*இந்த வேளையில் யூதத்தலைவர்களின் அதிகரித்து வந்த வெறுப்புணர்வு என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இயேசு சென்ற இடங்களுக்கெல்லாம் ஒற்றர்கள் அவரைப் பின்தொடர்ந்து, அவர்மீது குற்றம் சாட்டுவதற்கு அடிப்படைகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள் (மாற். 3:2; மத். 12:10). கிறிஸ்து தமது விரோதிகளின் வலைகளிலிருந்து தப்பியபோது, அது அவர்களை மூர்க்கமான கோபத்தினால் நிரப்பிற்று (லூக். 6:11). மத்தேயு, "... பரிசேயர் வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினார்கள்" என்று எழுதினார் (மத். 12:14; மாற். 3:6ஐக் காணவும்). யோவான், "யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி" "அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகை*

*தேடினார்கள்" என்று பதிவு செய்தார் (யோவா. 5:16, 18).*

*யூத அதிகாரிகளின் பகுத்தறிவற்ற வெறுப்புணர்வைப் பதிவு செய்வது அவசியம் என்று சுவிசேஷ விவரங்களின் எழுத்தாளர்கள் நினைத்தது ஏன்? ஒருவேளை, அவர்கள் இயேசு சிலுவையில் அறையப்படுதலில் யூத அதிகாரிகளின் பங்கைத் தெளிவாக்க விரும்பியிருக்கலாம். புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் ரோமச் சிலுவையில் மரித்தல் என்பதை விட மிகவும் அதிகமான அவகீர்த்தியுள்ள விஷயம் வேறு எதுவும் இருந்ததில்லை (எபி. 6:6; 12:2ஐக் காணவும்). தேவநம்பிக்கையற்றவர்கள் (ஒரு ஏளனச் சிரிப்புடன்), "நீங்கள் கூறுவதுபோல் இயேசு பூரணத்துவம் வாய்ந்த ஒரு நபராக இருந்திருந்தால், அவர் ஏன் ஆக்கினைக்குட்பட்ட ஒரு குற்றவாளியாக மரித்தார்?" என்று கேட்கின்றதை நான் கற்பனை செய்ய முடிகிறது. அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க நமக்கு உதவுவது போன்ற வசனப்பகுதிகளை நாம் இப்பாடத்தில் படிப்போம்.*

*நாம் முதலில் முரண்பாட்டில் மூன்று உதாரணங்களைக் கவனிப்போம். பின்பு நாம், எதிர்ப்பின் செயல்விளைவுகளை - ஓரளவுக்கு - எதிர்த்து நிற்க இயேசு என்ன செய்தார் என்பதைக் காண்போம்.*

## வார்த்தைகளினால் வெறுப்பிற்குப் பதில் அளித்தல்

*இந்தப் பாடத்தில் உள்ள பகைமை உணர்வானது ஓய்வுநாள் பிரமாணத்தைச் சுற்றி அமைந்துள்ளது. சுவிசேஷ விவரங்கள், ஓய்வுநாள் பற்றிய ஆறு கருத்து வேறுபாடுகள் பற்றிக் கூறுகிறது. அவற்றில் மூன்றைப் பற்றி இந்த எடுத்துரைப்பில் நாம் படிப்போம்.*

*"ஓய்வுநாள்" என்ற வார்த்தை அடிப்படையில் "இளைப்பாறுதல்" என்று அர்த்தப்படுத்துகிறது. தேவன் இந்த உலகத்தைப் படைத்தபோது, அவர் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:1-3). பிற்பாடு, ஏழாம் நாள் ஓய்வானது* (Sabbath) *ஓய்வுநாள் என்று அழைக்கப்பட்டது, இது பத்துக் கட்டளைகளின் ஒரு பகுதியாகக் கொடுக்கப்பட்டது (யாத். 20:8-11).* Sabbath *என்பது இளைப்பாறுதலின் நாளாக இருந்தது, இது தேவனைப் பற்றிச் சிந்தித்து, களிகூரும் நாளாக இருந்தது. ஓய்வுநாள் ஆசரிக்கப்படுதலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தேவன் அதை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனையை நியமித்தார் (எண். 15:32-36; நெகே. 13:15-22; எரே. 17:19-27 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*தேவனுடைய பிரமாணங்கள் போதிய அளவுக்கு கண்டிப்பானவைகளாக இருந்தன, ஆனால் அதை அத்துடன் விட்டுவிட மனிதர்கள் விரும்பவில்லை.* H. I. *ஹெஸ்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *இந்த நாளின் ஆசரிப்பு என்பது மிகவும் சிக்கலும் சுமையும் நிறைந்த வேலையாக வளர்க்கப்பட்டது. மோசேயின் கட்டுப்பாடுகள் நூற்றுக்கணக்கானவைகள் ஆகும் வரையிலும் அவை விரிவாக்கப் பட்டுப் பெருக்கப்பட்டன. இந்த ஒழுங்கு முறைமைகளின் பல*

*கூறுகள் மதியீனமானவைகளாக இருந்தன. எடுத்துக்காட்டாக, ஓய்வுநாளன்று பொய்ப் பற்களை அணிதல் என்பது ஒரு சுமையைச் சுமத்தல் என்று கருதப்பட்டது, இதுபோலவே நரைமுடி ஒன்றைப் பிடுங்குதல், அல்லது கோதுமைக் கதிரை கொய்தல் அல்லது அகரவரிசையில் இரு எழுத்துக்களை ஒன்றாக எழுதுதல் கூட வேலையாகக் கருதப்பட்டது.[3] பெருக்கப்பட்ட இந்த ஒழுங்கு முறைகள் ஓய்வுநாள் ஆசரிப்பை ... நடைமுறைக்குச் சாத்திய மற்றதாக்கியிருந்தன ... இந்த முழு அமைவு முறையும் ஓய்வுநாளின் ஆவிக்குரிய தன்மையை அழித்திருந்தன.[4]*

*வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "அவர்கள் - மனிதனுக்குத் தேவனின் கொடையான - ஓய்வுநாள் பிரமாணத்தை எடுத்து அதை ஒழுங்கு முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றின் சிறைச்சாலையாக மாற்றியிருந்தார்கள்" என்று எழுதியுள்ளார்.[5]*

*யூதர்கள் இயேசுவை அகப்படுத்த முயற்சி செய்கையில், ஓய்வுநாள் பற்றிய அவர்களின் தெளிவற்ற மற்றும் சிக்கலான விதிகள் "சட்ட அமலாக்கத்தில் அவர்களுக்கு மிகவும் பிரியமான துணுக்காயிற்று."[6] (நடைமுறை நோக்கங்கள் யாவற்றிற்கும்) எவரொருவரும் ஓய்வுநாள் பிரமாணங்களைப் பூரணமாகக் கடைப்பிடிக்க முடியாதாகையால், ஒரு மீறுதலில் இயேசுவைப் பிடித்தலில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது என்று அவர்கள் நினைத்தார்கள் - மற்றும் அவ்விதமான மீறுதலானது மரண தண்டனைக்குரியதாக இருந்தன (எண். 15:32-36ஐக் காணவும்)![7]*

**ஓய்வுநாளன்று ஊனமுற்ற மனிதர் ஒருவரைக் குணமாக்குதல் (யோவா. 5:1-47)**

*நமது முந்திய பாடத்தை நாம் முடிக்கையில், இயேசு தமது மாபெரும் கலிலேய ஊழியத்தில் மும்முரமாயிருந்தார். இந்தப் பாடம் தொடங்குகையில், இயேசு மதரீதியான ஒரு பண்டிகையில் கலந்து கொள்வதற்காக எருசலேம் செல்ல ஒரு இடைவேளையை எடுத்துக்கொண்டிருந்தார் (யோவா. 5:1). மோசேயின் பிரமாணமானது, ஒவ்வொரு யூத ஆணும் ஆண்டிற்கு மூன்று முறைகள் பிரதானமான பண்டிகைகளுக்கு - பஸ்கா, பெந்தெகொஸ்தே மற்றும் கூடாரப் பண்டிகை ஆகியவற்றிற்கு[8] - எருசலேம் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டது, இயேசு எப்போதுமே நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தவராயிருந்தார் (மத். 5:17). இது எந்தப் பண்டிகை என்று நமக்கு உறுதியாகத் தெரியவில்லை, ஆனால் இது பஸ்காவாயிருக்கலாம் என்று கருத்துக் கொள்வதற்கு ஒரு நல்ல காரணம் ஏற்படுத்தப்பட முடியும்.[9] நமது படிப்பின் நோக்கத்திற்காக இதைப் பஸ்கா என்றே நாம் கருதுவோம்.*

*இதற்கு முந்திய பஸ்காவின்போது, இயேசு தேவாலயத்திலிருந்து மதரீதியான வர்த்தகர்களைத் துரத்தி விட்டிருந்ததன் மூலம் யூதமத அதிகாரிகளைக் கோபமூட்டியிருந்தார். இந்தப் பஸ்காவின் போது, அவர் பெதஸ்தா என்ற குளத்தினருகில் ஒரு மனிதரைக் குணமாக்கியதன் மூலம் அவர்களைக் கோபமூட்டினார். இந்த அற்புதத்தைப் பின்வரும் வார்த்தை*

*களில் யோவான் பதிவு செய்தார்: "இயேசு அவனை நோக்கி: 'எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட' என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான்" (யோவா. 5:8, 9அ). இத்துடன் யோவான் பின்வரும் தனிச்சிறப்பான கூற்றைக் கூடுதலாகப் பதிவு செய்தார்: "அந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது" (வ. 9ஆ). ரபீத்துவப் பாரம்பரியத்தின்படியாக, ஓய்வுநாளான்று, ஒரு மனிதனை அவனது படுக்கையின்மீது வைத்துத் தூக்கிச் செல்லுதல் சட்டத்திற்கு உட்பட்டதாக இருந்தது (அவர்களின் தர்க்கத்தில் அந்தப் படுக்கை என்பது "சார்புள்ளதாக" இருந்தது), ஆனால் ஒரு படுக்கையை மட்டும் தூக்கிச் செல்லுதல் என்பது சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தது.*

*முதலில் யூதமதத்தலைவர்கள், படுக்கையைத் தனது கைகளில் தூக்கிச் சென்ற மனிதனைத் தீவிரமாக தாக்கினார்கள்; ஆனால் அவனைப் படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடக்கச் சொன்னவர் இயேசு என்று அவர்கள் கண்டறிந்தபோது, அவர்களின் தாக்குதல் அவர்மீது திரும்பிற்று. அவர்களின் தாக்குதலானது, விரிவாய்ப் பதிவு செய்யப்பட்டுள்ள இயேசு வின் முதல் வெளியரங்கமான பிரசங்கத்தைத் தூண்டியது, இது இயேசு தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதற்கு வற்புறுத்திய நீண்ட உரைகள் பலவற்றில்[10] முதலாவதாக இருந்தது.*

*தேவன் ஓய்வுநாளன்று "கிரியை" செய்ய இயலுமென்றால், தாமும் அதைச் செய்ய முடியும் என்பதே, இந்த வேளையில் இயேசுவின் முதல் தற்காப்பு வாதமாக இருந்தது (வ. 17).[11] அவர் தாமும் தமது தந்தையும் கூட்டாளிகளாக இருக்கும் செயல்களுக்கான உதாரணங்களைக் கொடுத்தார் (வ. 19-30). இயேசு தம்மைத் தேவனுடன் வரிசைப்படுத்தியது யூதர்களை மூர்க்கம் அடையச் செய்தது: அவர் "தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினார்" (வ. 18)! பின்பு கிறிஸ்து தாம் உரிமைகோரினபடியே இருப்பதை நிரூபிப்பதற்குச் சாட்சியங்களின் வரிசைத் தொடர் ஒன்றை ஏற்படுத்தினார்: யோவான் ஸ்நானன், தாம் செய்த அற்புதங்கள், வேதவசனங்கள், மற்றும் விசேஷமாகத் தேவன் தாமே (வ. 31-47). இந்த வேளையில் இயேசுவின் வார்த்தைகள் அவரது விரோதிகளுக்கு "பரிசுத்த எழுத்தில் ஆழ்ந்தறிவும் அறிவுறுத்துதலும் உள்ளவைகளாயிருந்தன" என்று பர்ட்டன் காஃப்மென் என்பவர் கூறினார்.[12]*

*இந்த எதிர்ப்புக்குப் பின்பு, வெகுவிரைவிலேயே இயேசு எருசலேமை விட்டுச் சென்றார் என்பது உறுதி. குறைந்தபட்சம், எருசலேமுக்கு இந்தப் பயணம் பற்றி வேறெதுவும் பதிவு செய்யப்படவில்லை.*

***ஓய்வுநாளன்று கதிர்கொய்தல் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5)***

*கிறிஸ்து கலிலேயாவுக்குத் திரும்பிய பின்பு,[13] ஒரு ஓய்வுநாளின் போது அவரும் அவரது சீஷர்களும் தானிய வயலின் ஊடே நடந்து கொண்டிருந் தார்கள், "அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து, கதிர்களைக் கொய்து,[14] தின்னத் தொடங்கினார்கள்" (மத். 12:1). லூக்கா, அந்த சீஷர்கள் "கதிர்களைக் கொய்து கைகளினால் நிமிட்டித் தின்றார்கள்" என்றும்*

*கூடுதலாகக் கூறினார் (லூக். 6:1). கதிர்களில் இருந்த தானியங்களில், அவை தின்னப்படுவதற்கு முன் நீக்கப்பட வேண்டிய மேல் உமி மூடியிருந்தது. இயேசுவின் பின்பற்றாளர்கள் அந்தக் கதிர்களில் உள்ள தானியங்களின் உமியை நீக்குவதற்காக அவற்றைத் தங்கள் கைகளில் வைத்துக் கசக்கினார் கள். பின்பு அவர்கள் அந்த உமிகளை ஊதிவிட்டு தானியங்களைத் தங்கள் வாய்களில் இட்டுக்கொள்ள முடியும்.*

*அவர்கள் தானியக் கதிர்களைக் கொய்து, கசக்கி, ஊதி, மற்றும் தானியங்களை மென்றுகொண்டு இருக்கையில், பரிசேயர்களின் குழுவொன்று திடீரென்று தோன்றி, அவர்கள் ஓய்வுநாளை மீறுவதாகக் குற்றம்சாட்டத் தொடங்கினார்கள்.[15] (இந்தக் காட்சி, நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டுள்ளது: பகட்டான பரிசேயர்கள் தங்களின் ஆடம்பரமான உடைகளுடன் தானிய வயலுக்குள் புகுந்து, தங்களை ஒளித்துக் கொண்டு, தங்களின் அன்பார்ந்த பாரம்பரியங்களைச் சற்றே மீறியதற்காக இயேசுவின்மீது தாவக் காத்திருந்ததைக் கற்பனை செய்து பாருங்கள்!)*

*அவர்கள் இன்னொரு மனிதரின் தானியங்களைக் களவு செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்படவில்லை. நியாயப்பிரமாணம், பயணிகள் தானியங்களைக் கொய்து உண்பதை அனுமதித்திருந்தது (உபா. 23:25). உழைப்பைப் பற்றிய ஓய்வுநாளின் பிரமாணம் மீறப்பட்டது என்பதே குற்றச்சாட்டாக இருந்தது. பரிசேயரைப் பொறுத்தமட்டில், தானியங்களின் ஒரு சில கதிர்களைக் கொய்தது என்பது அறுவடை செய்தலுக்குச் சமமானதாகவும், கைகளில் கசக்கியது என்பது தானியக்கதிர்களை கதிரடித் ததற்குச் சமமானதாகவும், உமிகளை ஊதியது என்பது தூற்றுவதற்குச் சமமானதாகவும், தானியங்களை உண்ணுதல் என்பது மாவரைத்தலுக்குச் சமமானதாகவும் இருந்தது. (இது அநேகமாக, சீஷர்கள் ஓய்வுநாளில் தடைசெய்யப்பட்டிருந்த செயலான "உணவைச் சமைத்தல்" என்பதையும் செய்தார்கள் என்ற விஷயத்தையும் கூட்டியிருக்கும்.)*

*இந்த வேளையில் இயேசுவின் தற்காப்பானது எருசலேமில் முன் வைக்கப்பட்டதிலிருந்து மாறுபட்டதாக இருந்தது. முடிவில், அவர்கள் "குற்றமில்லாதவர்களைக்" (மத். 12:7) குற்றப்படுத்தியதாக அவர் கூறினார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர்கள் "குற்றமற்றவர் களாய்" இருந்ததாக இயேசு வாதாடினார். இதை அவர் ஐந்து அடிப்படை களில் செய்தார்:*

*(1) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் தாவீது தமது பசியை ஆற்றுவதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த பரிசுத்த அப்பங்களை உண்டபோது அவர் குற்றவாளியென்று தீர்க்கப்படவில்லை (மத். 12:3, 4; லூக். 6:3, 4; மேலும் 1 சாமு. 21:6; லேவி 24:5-9ஐக் காணவும்).[16]*

*(2) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் ஆசாரியர்கள், ஓய்வுநாளன்று வேலை செய்தபோது அவர்கள் குற்றவாளிகளாகத் தீர்க்கப்படாதிருந்தார் கள் (மத். 12:5; மேலும் எண். 28:9, 18, 19ஐக் காணவும்). ஓய்வுநாள் என்பது ஆசாரியர்களுக்கு வாரத்தில் மிகவும் வேலை மும்முரமாய் இருந்த நாளாய் இருந்தது.*

*(3) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் ஓய்வுநாள் என்பது ஒரு சுமையாக இருப்பதையல்ல ஆனால் ஒரு ஆசீர்வாதமாக இருப்பதையே நோக்கங் கொண்டிருந்தது: "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது'' (மாற். 2:27). ஓய்வுநாளன்று உயிர்பிழைப்பதற்கான சிறு வேலையைச் சீஷர்களுக்கு மறுத்தல் என்பது அவர்கள் மீது நியாயமற்ற சுமையை வைப்பதாயிருந்தது.*

*(4) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் (பசி உட்பட) துன்பத்தை நீக்குதல் என்பது சடங்குகளை (விசேஷமாக மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சடங்குகளை) நிறைவேற்றுதலைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இயேசு தம்மீது குற்றம் சாட்டியவர்களுக்கு ஓசியா 6:6ன் போதனையை நினைவூட்டினார்: "பலியை அல்ல இரக்கத்தையே[17] விரும்புகிறேன்" (மத். 12:7).*

*(5) "குற்றமற்றவர்கள்" - ஏனெனில் மேசியாவை மனிதரின் பாரம் பரியங்களுக்கு உட்படுத்தக் கூடாதிருந்தது. இயேசு பரிசேயர்களை முகம் வெளிரச் செய்யும் இரண்டு கூற்றுக்களை ஏற்படுத்தினார்: "தேவாலயத்தி லும்[18] பெரியவர்[19] இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத். 12:6); "மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" (மத். 12:8; மாற். 2:28; லூக். 6:5ஐக் காணவும்). இயேசு தம்மையே குறிப்பிட்டார் என்பது தெளிவு. அவர்களல்ல, அவரே ஓய்வுநாள் பற்றிப் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களின் கட்டமைப்பிற்குள் எதைச் செய்ய முடியும் அல்லது எதைச் செய்ய முடியாது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் உடையவராயிருந்தார்.*

*பரிசேயர்கள் கோபத்தினால் பட்சிக்கப்பட்டவர்களாகத் தங்களுக்குள் முறுமுறுத்துக் கொண்டே அங்கிருந்து புறம்பே சென்றிருக்க வேண்டும்.*

### சூம்பின கையுடையவனை ஓய்வுநாளில் குணமாக்குதல்
### *(மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11)*

*இதற்குச் சற்றுப் பின்பு,[20] "வேறொரு ஓய்வுநாளிலே," இயேசு ஒரு ஜெப ஆலயத்திற்குச் சென்றார், அங்கு அவர் போதிக்க அனுமதிக்கப்பட்டார் (லூக். 6:6). மத்தேயு சுவிசேஷ விவரத்தின்படி, "அவர் அவ்விடம் விட்டுப் போய் அவர்களுடைய ஜெப ஆலயத்திலே பிரவேசித்தார்" (மத். 12:9), இது அவரைத் தானிய வயலில் குற்றம் சுமத்த விரும்பிய பரிசேயர்களைக் குறித்தது.*

*அங்கிருந்த கூட்டத்தில், "... சூம்பின கையையுடைய மனுஷன் ஒருவன் இருந்தான்'' (மத். 12:10). (இவர் ஒருவேளை கிறிஸ்துவை அகப்படுத்துவதற்காக அவரது விரோதிகளால் இங்கு கொண்டு வரப்பட்டிருந்தாரோ?) பரிசேயர்கள் சற்று நேரம், "அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்பேரில் குற்றஞ்சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்து"[21] காத்திருந்தார்கள் (மாற். 3:2). கடைசியில், அவர்களால் இனியும் காத்திருக்க முடியாமற் போயிற்று, அவர்கள் "ஓய்வு நாளில் சொஸ்தமாக்குகிறது நியாயமா?'' என்று அவரது பிரசங்கத்தை இடைமறித்து வெடித்தார்கள் (மத். 12:10).*

*இயேசு பயமடையவில்லை. அவர் சூம்பின கையையுடைய மனிதனை நோக்கி, "எழுந்து நடுவே நில்!" என்று கூறினார் (மாற். 3:3). கூட்டத்திற்கு முன்பாக அம்மனிதன் நிற்க, இயேசு தம்மைக் கேள்வி கேட்டவர்களை நோக்கி, "ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ,[22] அழிப்பதோ, எது நியாயம்?" என்று கேட்டார் (லூக். 6:9). அவர் எல்லாரும் எடுத்துரைக்கக் கூடிய ஒரு எளிய விவரிப்பைப் பயன்படுத்தினார்:*

> *உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடு இருந்து, அது ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிட மாட்டானோ?[23] ஆட்டைப் பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான்! ஆதலால், ஓய்வுநாளிலே நன்மை செய்வது நியாயந்தான் என்று சொன்னார் (மத். 12:11, 12).*

*இயேசு தமது விரோதிகளின் பரிவிரக்கக் குறைவினால் மனமுடைந்தவராகி (மாற். 3:5), அந்த மனிதனிடத்தில், "உன் கையை நீட்டு!" (மத். 12:13அ) என்றார். "அவன் நீட்டினான்; அது மறுகையைப்போல் சொஸ்தமாயிற்று" (வ. 13ஆ). இது எல்லாரும் காணக்கூடிய அற்புதமாய் இருந்தது.*

*அவரது விரோதிகள் (மீண்டும்) வாயடைக்கப்பட்டிருந்தார்கள், ஆனால் அவர்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. அவர்கள், "வெளியேபோய், அவரைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" (மத். 12:14). மாற்குவின் சுவிசேஷ விவரமானது ஏறக்குறைய நம்ப இயலாத பின்வரும் விவரத்தைக் கூடுதலாகக் கூறுகிறது: "உடனே பரிசேயர் புறப்பட்டுப்போய் அவரைக் கொலைசெய்யும்படி, அவருக்கு விரோதமாய் ஏரோதியரோடேகூட ஆலோசனைபண்ணினார்கள்" (மாற். 3:6). பரிசேயர் ஏரோதியர்களை இழிவாகக் கருதினார்கள், ஆனால் கிறிஸ்துவை வாயடைப்பதற்கு அவர்களின் அரசியல்ரீதியான செல்வாக்கு அவசியம் என்று பரிசேயர்கள் நம்பினார்கள் என்பது தெளிவு. அவர்கள் ஏரோதியர்களை வெறுத்தார்கள், ஆனால் அவர்கள் இயேசுவை இன்னும் அதிகமாக வெறுத்தார்கள்.*

*ஓய்வுநாள் விவாதம் பற்றிய இந்தப்பகுதியை விட்டுச் செல்லுவதற்கு முன்பு, இயேசு ஓய்வுநாள் பற்றிய தேவனுடைய பிரமாணங்களை ஒருக்காலும் மீறியதில்லை என்றும் அவ்வாறு செய்யும்படி எவரொருவரையும் ஊக்கப்படுத்தியது இல்லை என்பதையும் நான் வலியுறுத்த அனுமதியுங்கள். ஆயினும் அவ்வப்போது அவர், ஆண்டுகளினூடே வேகமாய்ப் பெருகிய மனிதப் பாரம்பரியங்களை மீறினார் - இது அவரது விரோதிகளைக் கோபப்படுத்திற்று. நமது வாசிப்பில் நாம் இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தின் பாதி வழியைக் கூட இன்னும் அடையவில்லை, ஆயினும் ஏற்கனவே அவரது விரோதிகள் அவரையும் அவரது செல்வாக்கையும் அழிப்பதற்கு இரவும் பகலும் வேலை செய்தார்கள்! J. W. மெக்கார்வி அவர்கள், "இந்த இடத்திலிருந்து இயேசுவின் வாழ்வுக்கு எதிரான இரத்தச் சிகப்பான சூழ்ச்சியானது சுவிசேஷம் முழுவதிலும் ஓடுகிறது" என்று எழுதினார்.[24]*

# *வெறுப்புணர்வுக்குச் செயல்களினால் பதில் அளித்தல்*

*ஒய்வுநாள் பற்றிய மூன்று எதிர்ப்புகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் இயேசு தனிச்சிறப்பான இரண்டு அடிவைப்புக்களை மேற்கொண்டார்.*

***தமது விரோதிகளிடமிருந்து பிரிதல்***

***(மத். 12:13-21; மாற். 3:7-12)***

*முதலாவது, மேலும் மோதலைத் தவிர்ப்பதற்காக கிறிஸ்து தமது விரோதிகளிடமிருந்து தம்மைப் பிரித்துக் கொண்டார். மத்தேயுவின் சுவிசேஷ விவரமானது, பரிசேயர், "வெளியே போய், அவரைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்" என்று பதிவு செய்த பின்பு (மத். 12:14), அது "இயேசு அதை அறிந்து, அவ்விடம் விட்டு விலகிப்போனார்" என்று கூறுகிறது (மத். 12:15அ). இது இறுக்கத் தைக் கலைக்கும் முயற்சியில் கிறிஸ்துவின் முதல் விலகிச் செல்லுதலாக இருந்தது. இது போன்று இன்னும் மற்ற விலகிச் செல்லுதல்களும் வரும்.*

*"இயேசு தம்முடைய சீஷர்களோடே அவ்விடம்விட்டு, கடலோரத் துக்குப் போனார்" (மாற். 3:7). அங்கும் மக்கள் அவரைக் கண்டறிந்தார்கள், "கலிலேயாவிலும், யூதேயாவிலும், எருசலேமிலும், இதுமேயாவிலும்,[25] யோர்தானுக்கு அக்கரையிலுமிருந்து திரளான ஜனங்கள் வந்து, அவருக்குப் பின்சென்றார்கள். அல்லாமலும் தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளிலு மிருந்து திரளான ஜனங்கள் ... அவரிடத்தில் வந்தார்கள் ..."[26] (மாற். 3:8). இயேசு மக்களுக்குப் போதித்து,[27] அவர்களின் நோயாளிகளைக் குணமாக்கி, அசுத்த ஆவிகளைத் துரத்தினார்; ஆனால் தாம் செய்திருந்ததை எவருக்கும் கூற வேண்டாம் என்று ஒவ்வொருவரையும் அவர் வற்புறுத்தினார் (மத். 12:15, 16; மாற். 3:11, 12ஐக் காணவும்). கூடுதலான விளம்பரம் என்பது அவரை வெறுப்பவர்களை இன்னும் உக்கிரமடையச் செய்யும்.*

*நடந்த ஒவ்வொன்றும் ஒரு தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது என்று மத்தேயு வலியுறுத்தினார் (மத். 12:17-21; ஏசா. 42:1-4ஐக் காணவும்): நகரத்திலிருந்து இயேசு விலகிச் சென்றதும் அமைதி காக்கும்படி அறிவுறுத்தியதும், "வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவு மாட்டார், அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை" என்ற வார்த்தைகளை நிறைவேற்றிற்று (மத். 12:19). நோயாளிகளையும் உருக்குலைந்தவர்களையும் அவர் குணமாக்கியது, "நெரிந்த நாணல்" போல் இருப்பவர்கள் மீதும் மங்கியெரிகிற திரியைப் போல் இருப்பவர்கள் மீதும் அவரது அக்கறையைக் காண்பித்தது (வ. 20). பலஸ்தீனத்தின் வெளிப்புறத் தில் (இதுமேயா, தீரு மற்றும் சீதோன் ஆகிய இடங்களில்) இருந்து மக்கள் வந்தார்கள் என்பது புறஜாதியாருக்கு இயேசுவின் ஊழியத்தினுடைய தனிச்சிறப்பை வலியுறுத்திற்று (மத். 12:18, 21).*

*இயேசு தொடர்ந்து போதித்தும் குணமாக்கியும் வந்தார். ஆனால் யூதத்துவத் தலைவர்களிடத்தில் உடனடியான எதிர்ச் செயலைத் தவிர்ப்பதற்காக அவர் தமது வழியிலிருந்து விலகியும் சென்றார்.*

## *அவரது பின்பற்றாளர்களில் இருந்து தேர்வு செய்தல்*
## *(மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16)*

*இயேசு தாம் இவ்வுலகத்தை விட்டுச் சென்ற பின்பு தமது ஊழியத்தைச் செய்வதற்காகப் பன்னிரு மனிதர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், வளர்ந்து கொண்டிருந்த வெறுப்புணர்வுக்கு மேலும் பதில் அளித்தார்.*[28] *அவரது நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருந்தன என்பது தெளிவு, மற்றும் அவரது மரணத்திற்கு முன்பே, விசேஷித்த மனிதர்கள் பயிற்று விக்கப்பட வேண்டும் என்பது இன்றியமையாததாயிருந்தது. "அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்" (மாற். 3:14) என்று இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதின் நோக்கத்தை மாற்கு விளக்கப்படுத்தினார். இவர்கள் அவருடன் பயணம் செய்து, அவரது போதனை மற்றும் உதாரணம் ஆகியவற்றில் இருந்து கற்றுக் கொள்வார்கள். அவர்கள் அனுபவத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கு அவர் விசேஷித்த ஊழியத்தினிமித்தமாகவும் அவர்களை அனுப்பு வார். இவ்விதமாக அவர்கள் போதிக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்படுவார்கள். இந்த வேளையிலிருந்து, கிறிஸ்துவின் முயற்சியில் பெரும்பான்மையான பகுதி, அப்போஸ்தலர்களைத் தயார் செய்தலுக்குத் திருப்பப்பட்டது.*

*பன்னிருவரைத் தேர்ந்துகொள்ளுதல் தேவனுடைய ஆலோசனை யின்றி செய்யப்படவில்லை. இயேசு தமது முடிவுகளை மேற்கொள்ளு வதற்கு முன்பு, அவர் "ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்*[29]*மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்" (லூக். 6:12). ஜெபம் என்பது எல்லா முடிவுகளுக்கும் முன்னதாக இருக்க வேண்டும்.*

*இயேசு தம்மைச் சுற்றிலும் முழு நேர சீஷர்கள் பலரைக் கொண்டிருந் தார்.*[30] *இரவு ஜெபத்திற்குப் பின்பு, அவர்களை அவர் கூடி வரச் செய்து, "அவர்களில் பன்னிரெண்டு பேரைத் தெரிந்துகொண்டு" (லூக். 6:13அ), தெரிந்துகொள்ளப்பட்ட அவர்களை அவர் "அப்போஸ்தலர்கள்" என்று அழைத்தார் (வ. 13ஆ; மத். 10:2ஐக் காணவும்). "அப்போஸ்தலர்" என்ற வார்த்தையானது ''அனுப்பப்பட்டவர்'' என்று அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தையை ஒரு விசேஷித்த ஊழியத்தினிமித்தம் அனுப்பப்பட்ட எவரொருவரையும் குறிப்பதற்குப் பொதுவான வழிமுறையில் பயன் படுத்தப்பட முடிந்தது,*[31] *ஆனால் இது இயேசுவாலேயே கட்டளையிடப் பட்ட பன்னிருவரைப் பொறுத்தமட்டில் கூடுதல் முக்கியத்துவம் கொண்டுள்ளது.*

*பன்னிருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற உண்மையானது அநேகமாகத் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கலாம்: "பன்னிரெண்டு" என்ற எண்ணிக்கையானது யூதர்களுக்கு விசேஷித்த அர்த்தம் உடையதாக இருந்தது; எபிரெயச் சிந்தனையில் இது மதரீதியான முழுமைத் தன்மையைக் கருத்தாகத் தெரிவித்தது. பன்னிரெண்டு கோத்திரப் பிதாக் களும் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களும் இருந்தன; இப்போது இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார்.*[32]

*மாற்குவின் அப்போஸ்தலர்களின் பட்டியல் இவ்விதமாக உள்ளது:*

*... சீமோன், இவனுக்குப் பேதுரு என்கிற பெயரிட்டார். செபதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, யாக்கோபின் சகோதரனாகிய யோவான், இவ்விருவருக்கும் "இடிமுழக்க மக்களென்று"[33] அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்கிற பெயரிட்டார். அந்திரேயா, பிலிப்பு, பற்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் காரியோத்து[34] என்பவர்களே (மாற். 3:16-19).[35]*

*லூக்காவின் பட்டியல் இதோ:*

*அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே (லூக். 6:14-16).*

*பிந்திய ஒருவேளை வரையிலும் (இயேசு பன்னிருவரையும் ஒரு பயிற்சி ஊழியத்திற்கு அனுப்பிய வரையிலும்) மத்தேயு தமது பட்டியலைத் தரவில்லை. ஆயினும், அந்தப் பட்டியலானது ஒப்பீட்டு நோக்கத்திற்காக உள்ளடக்கப்பட வேண்டும்:*

*அந்தப் பன்னிரெண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன: முந்தினவன் பேதுரு என்னப்பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்திரேயா, செபதேயுவின் குமாரன் யாக்கோபு, அவன் சகோதரன் யோவான், பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு, கானானியனாகிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவைகளே (மத். 10:2-4).*

*நான்காவதும் கடைசியானதுமான ஒரு பட்டியல் அப். 1ல், யூதாஸிற்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் காணப்படுகிறது: "... பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் ..." (அப். 1:13).*

*இந்த நான்கு பட்டியல்களையும் ஒப்பிட்டுக் காண்பதில் மதிப்பு உள்ளது. ("வேத வசனங்களில் பட்டியலிடப்பட்டுள்ள அப்போஸ்தலர்கள்" என்ற அட்டவணையில் காணவும்). எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு பட்டியலிலும் பேதுருவின் பெயர் முதலில் இருப்பதைக் கவனியுங்கள். இது, பேதுரு "முதல் போப்" என்று நிரூபிப்பதில்லை, ஆனால் அவரது எழுச்சித்திறனும் கணிசமான திறமையும் அவரை அப்போஸ்தலர்களின் மத்தியில் ஒரு இயல்பான நடத்துனராக ஏற்படுத்தியிருந்தன. முதல் மூன்று பட்டியல்களிலும் யூதாஸின் பெயர் கடைசியில் வருவதை நாம் காண்கின்*

றோம். புகழற்ற அவர் தம் செயலானது அவரை அந்த இழிவான இடத்திற்குத் தகுதிப்படுத்திற்று.

மற்ற விவரங்களும் சுட்டிக் காண்பிக்கப்பட முடியும். எடுத்துக் காட்டாக, உடன்பிறந்த சகோதரர்களின் தொகுதிகள் பல இருந்தன (மற்றும் ததேயு "யாக்கோபின் மகனான யூதா" என்றும் அறியப்பட்டார்). ஒவ்வொரு பட்டியலுமே நான்கு பேர் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படக் கூடும் என்பதும் - ஒவ்வொரு பட்டியலின் இந்த ஒவ்வொரு குழுவிலும் ஒரே தனிநபரே முதலில் குறிப்பிடப்படுகிறார் என்பதும் - மிகவும் தனிச்சிறப்பான கருத்தாக உள்ளது: முதல் குழுவில் பேதுரு முன்னிலை வகிக்கிறார், இரண்டாவது குழுவில் பிலிப்பு முன்னிலை வகிக்கிறார், மூன்றாவது குழுவில் அல்பேயுவின் மகனான யாக்கோபு முன்னிலை வகிக்கிறார். ஒவ்வொரு குழுவினுள்ளாகவும் பெயர்களின் வரிசை அமைவுகளில் கணிசமான அளவுக்கு மாறுபாடு இருப்பதால், இந்த மூன்று பெயர்களும் ஒரே சீராக வைக்கப்பட்டிருத்தல் என்பது வேண்டுமென்றே செய்யப்பட்டதாகக் காணப்படுகிறது. பேதுரு, பிலிப்பு, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு ஆகியோர் பயிற்சி ஊழியம் மற்றும் பிற விசேஷித்த திட்டங்கள் ஆகியவற்றிற்கு "குழுத் தலைவர்களாக" இருந்திருக்கலாம்.

இந்தப் பட்டியல்களை மீண்டும் கண்ணோக்குங்கள். முந்திய பாடங்களில் நாம் இவர்களில் பல மனிதர்களைச் சந்தித்து இருக்கின்றோம்: பேதுரு மற்றும் அந்திரேயா (யோவா. 1:40, 41; மத். 4:18), யாக்கோபு மற்றும் யோவான் (மத். 4:21[36]), பிலிப்பு மற்றும் ஒருவேளை பற்தொலொமேயு[37] (யோவா. 1:43, 45) மற்றும் மத்தேயு (மத். 9:9). மற்றவர்களைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் சிறிதளவே கூறப்பட்டுள்ளது, ஆனால் இவர்களைப் பற்றி மூன்று திறவுகோல் விவரங்களை நாம் அறிகின்றோம். முதலாவது, இவர்கள் எல்லாருமே, பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் மற்றும் மத்தேயு ஆகியோர் அழைக்கப்பட்டது போன்றே அழைக்கப்பட்டிருந்தார்கள். இரண்டாவது, பேதுரு மற்றும் பிறரைப் போலவே இவர்கள் எல்லாரும் ஆவிக்குரிய வகையில் தங்களுடைய முந்திய சாதனைகளினிமித்தமாகத் தேர்ந்து கொள்ளப்படவில்லை, ஆனால் தங்களின் சாத்தியக்கூறான நிலையினிமித்தமாகவே தேர்ந்து கொள்ளப்பட்டார்கள். (இயேசு அவர்களின் பலவீனங்கள் மற்றும் தவறுகள் ஆகியவற்றைக் கண்ணோக்காமல், அவர்கள் எதிர்காலத்தில் எவ்வாறாக முடியும் என்பதையே கண்ணோக்கினார். இதே பிரகாரமாகவே தேவன் நம்மையும் கண்ணோக்குகின்றார், தேவனுக்கு நன்றி!) மூன்றாவது, அவர்கள் எல்லாரும் போதிக்கவும் அசுத்த ஆவிகளைத் துரத்தவும் இயேசுவால் வல்லமை அளிக்கப்படுவார்கள் (மத். 10:1ஐக் காணவும்). இந்த விவரங்கள் ஒவ்வொன்றிற்கும், "யூதாஸ் காரியோத்து உட்பட" என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ள என்னை அனுமதியுங்கள்.

## *முடிவுரை*

*பன்னிருவரைத் தேர்ந்துகொண்ட செயலானது மலைப்பிரசங்கத்திற்கு ஒரு தூண்டுதல் வகையை அளித்தது - இதைப் பற்றி நாம் அடுத்த இரண்டு பாடங்களில் படிப்போம். ஆயினும் நாம் இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன்பு, கடைசியாகச் சில உற்றுநோக்கல்களை ஏற்படுத்துவோம்.*

*இயேசுவும்கூட விமர்சிக்கப்பட்டார் - ஆனால் இது அவரது ஊழியத்தில் அவரைச் சேதப்படுத்தவில்லை. அவர் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவசியமான யாவற்றையும் தொடர்ந்து செய்தார்.*

*நீங்கள் சரியானவற்றைச் செய்தால், நீங்களும்கூட விமர்சிக்கப் படுவீர்கள் (இதைப்பற்றி நாம் நமது அடுத்த பாடத்தில் [மத். 5:11] காண்போம்). விமர்சனங்கள் வரும்போது, நீங்கள் தேவனுடைய சித்தத்தின் மத்தியில் உறுதியாக இருப்பதை ஆய்வு செய்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள் (1 பேது. 4:14-16ஐக் காணவும்). நீங்கள் அவ்வாறிருந்தால், நீங்கள் [ஊழியத்தை விட்டு] வெளியேறிவிடும் அளவுக்கு விமர்சனம் உங்களை ஊக்கமிழக்கச் செய்வதற்கு அனுமதித்து விடாதீர்கள். மாறாக, விசுவாசத்துடன் நிலைத்திருக்க தேவையான யாவற்றையும் செய்யுங்கள்.*

---

*குறிப்புகள்*

*[1]நீங்கள் இந்தப் பாடத்திற்கு முகவுரையாக ஒரு இயற்கையான புயல் உருவாகுதலின் வார்த்தைச் சித்தரிப்பைப் பயன்படுத்த விரும்பலாம். [2]இந்த இடத்திலிருந்து, மாபெரும் கலிலேய ஊழியத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் வரிசை முறைமை பற்றி பல்வேறு ஒப்பீடுகளில் பலப்பல வேறுபாடுகள் உள்ளன. நான் அவ்வப்போது பிற சாத்தியக்கூறுகளைக் குறிப்பிட்டாலும் சாத்தியமான எல்லா வேறுபாடுகளையும் பட்டியலிடுவதற்கு நான் முயற்சி செய்வதில்லை. நிகழ்ச்சிகளின் மிகச் சரியான வரிசை முறைமை மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை; அவ்வாறிருந்ததென்றால், பரிசுத்த ஆவியானவர் வரிசை முறைமையில் மிகவும் தெளிவாக இருந்திருப்பார். [3]பொருத்தமற்ற பிற விவரங்களுடன் பின்வருபவைகளும் இருந்தன: ஆணியடிக்கப்பட்ட செருப்பு ஒன்றை ஓய்வுநாளில் அணிந்து செல்லக் கூடாது, ஏனெனில் அது ஒரு சுமையாகக் கருதப்பட்டது; ஒரு மனிதர் ஒரு முழுரொட்டியைத் தூக்கிச் செல்லலாம், ஆனால் இரு மனிதர்கள் சேர்ந்து அதே ரொட்டியைத் தூக்கிச் செல்லக்கூடாது.* [4]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 142. [5]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 305. [6]Adam Fahling, *The Life of Christ* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1936), 195. *[7]பரிசேயர் கடினமான முயற்சி செய்த போதிலும், அவர்கள் இயேசுவின்மீது ஓய்வுநாளை மீறிய குற்றம் சாட்டப் போதுமான ஆதாரத்தை ஒருபோதும் கண்டறிய முடியாதிருந்தது. அவரது பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில், அவர் மீதான விசாரணைகள் பலவற்றில் ஓய்வுநாளை மீறிய குற்றச்சாட்டு ஒருபோதும் கொண்டு வரப்படவில்லை. [8]''யூதர்களின் பண்டிகைகள்'' என்ற அட்டவணையை "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும். [9]பல்வேறு சாத்தியக்கூறுகளின் கலந்துரையாடல் ஒன்று* A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the*

*Life of Christ* (New York: Harper & Row, 1950), 267-70 *என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.* [10]*இப்படிப்பட்ட ஆறு உரைகள் யோவான் சுவிசேஷத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளன. இவற்றில் ஒன்றைத் தவிர மற்ற எல்லாத் தற்காப்பு வாதங்களும் எருசலேமில் நடைபெற்றன.*

[11]*இயேசுவின் தற்காப்பு வாதம் பற்றிய விவரமான ஆய்வை "தேவனுக்குச் சமமானவர்" என்ற பிரசங்கத்தில் காணவும்.* [12]James Burton Coffman, *Commentary on John* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1974), 158. [13]*பின்வரும் காரண வரிசைகளினால் நாம் இயேசு கலிலேயாவுக்குத் திரும்பிச் சென்றார் என்று யூகித்து உணருகின்றோம்: அடுத்த வரலாறு ஒரு ஜெப ஆலயத்தில் நடைபெறுகிறது. மத்தேயு சுவிசேஷத்தின்படி, இது தானிய வயலில் இயேசுவுக்கு அறைகூவல் விடுத்திருந்த பரிசேயர்கள் வந்திருந்த ஜெப ஆலயமாக இருந்தது (மத். 12:2, 9). மாற்கு சுவிசேஷத்தின்படி, இந்த ஜெப ஆலயமானது உறுதியாகவே கடலுக்கு (அதாவது கலிலேயாக் கடலுக்கு) நெருங்கியிருந்தது (மாற். 3:5-7).* [14]*இந்த நிகழ்ச்சியானது பஸ்கா முடிந்தவுடன் நடைபெற்றிருந்தால், அந்தத் தானியம் அநேகமாக பார்லி என்பதாகவே இருந்திருக்கும்.* [15]*லூக்கா சுவிசேஷத்தின்படி, பரிசேயர்கள் சீஷர்களை எதிர்த்து நின்றார்கள். மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷத்தின்படி பரிசேயர்கள் இயேசுவுக்கு அறைகூவல் விடுத்தார்கள். அவர்கள் அநேகமாக இவ்விரண்டையும் செய்திருப்பார்கள்.* [16]*இந்த உதாரணங்களில் எதுவும், நாம் தேவனுடைய பிரமாணத்தை தண்டனையில் இருந்து விதிவிலக்குடன் மீறமுடியும் என்பதற்கான நிரூபணமாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. யூதத் தலைவர்கள் தாவீதைக் கண்டனம் பண்ணவில்லை என்றால், அவர்கள் ஏன் தம்மையும் தமது சீஷர்களையும் கண்டனம் பண்ணினார்கள் என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது.* [17]NASB*யில் ஓசியா 6:6ல் பரிவிரக்கம் என்பதற்குப் பதிலாக "பற்றுறுதி" என்றுள்ளது, ஆனால்* KJV*யில் "இரக்கம்" என்றுள்ளது.* [18]*இது யூதர்களுக்கு வரம்புமீறிய கூற்றாக இருந்திருக்க வேண்டும், ஏனெனில் அவர்களைப் பொறுத்தமட்டில், தேவன் ஒருவர் மட்டுமே தாம் வாசம் பண்ணிய தேவாலயத்தை விடப் பெரியவராக இருந்தார்!* [19]"Something" *என்பது கிரேக்க மொழிப் பிரதியின் சரியான மொழிபெயர்ப்பாக உள்ளது, ஆனால்* KJV *மொழிபெயர்ப்பு இந்தக் கூற்றில் மறைவாக உணர்த்தப் படுகிற வலிவான கருத்தைத் தெரிவிக்கிறது: "ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த இடத்தில் தேவாலயத்தைக் காட்டிலும் பெரியவர் ஒருவர் இருக்கின்றார்."* [20]*இது மத்தேயு சுவிசேஷ விவரத்தில் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது (மத். 12:9).*

[21]*அவர்கள் யூதச் சங்கம் ஒன்றின் முன்பாக அவரைக் குற்றம் சாட்ட விரும்பினார்கள், அது அவர்மீது மரணதண்டனை விதிக்க ஏதுவாயிருக்கும்.* [22]*அவர்களின் சொந்த முறைமைகள் ஏழாம் நாளில் மருத்துவர்களும் மற்றவர்களும் பிறரின் உயிரைக் காக்க அனுமதித்தது.* (Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah,* New Updated Version [Peabody, Mass.: Hendrickson Publishers, 1993], 515). [23]*இன்னொரு சந்தர்ப்பத்தில் இயேசு இதே விவரிப்பைப் பயன்படுத்தினார், அதில் விலங்கை மட்டும் மாடாக மாற்றினார் (லூக். 14:5). சிலர் "குழியில் விழுந்த மாடு" என்ற ஒப்புவமையை சபை கூடிவருதலை விட்டுவிடுவதற்கு அல்லது தேவனுடைய கட்டளைகளைத் தொடர்ந்து புறக்கணிப்பதற்குச் சாக்குப்போக்காகப் பயன்படுத்தினார்கள். பழம்பெரும் பிரசங்கியார் ஒருவர் ஒரு மனிதரிடத்தில், "உங்கள் மாடு தொடர்ந்து குழியில் விழுந்து கொண்டிருந்தது என்றால், ஒன்று நீங்கள் அந்த மாட்டை விற்று விட வேண்டும் அல்லது அந்தக் குழியை* [*மண்போட்டு*] *நிரப்பிவிட வேண்டும்!" என்று கூறினார்.* [24]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard

Publishing Co., 1914), 198. [25]“இதுமேயா” என்பது “ஏதோமியர்களின் நாடு” என்பதைக் குறிக்கிறது (“இதுமேயா” என்பது “ஏதோம்” என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது). மகா ஏரோது ஒரு இதுமேயனாக/ஏதோமியனாக இருந்தான். [26]இந்தப் பல்வேறு இடங்களின் அமைவை இந்தப் புத்தகத்தில் “கூறிமுடிக்கப் பட்டுள்ள கிறிஸ்துவின் பயணங்கள்'' என்ற குறிப்பில் உள்ள வரைபடத்தில் காணவும். [27]மீண்டும் ஒருமுறை மக்கள் கூட்டம் இயேசுவை நெருங்கிற்று, மற்றும் முன்பு ஒருமுறை செய்ததுபோல், அவர் பிரசங்க மேடையாகப் பயன்படுத்த வேண்டு மென்றால் அதற்குத் தயாராக ஒரு படகு அங்கு இருந்தது. இந்த வேளையில் அந்தப் படகு பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பதற்கு நாம் குறிப்பு எதையும் காண்பதில்லை. [28]இது சீஷத்துவத்தின் மூன்றாவது படிநிலையாக இருந்தது - இது ஒரு சிலரைத் தேர்ந்தெடுப்பதற்கான விசேஷித்த படிநிலையாகும். [29]இது எந்த மலை என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. லூக்கா 6ல் உள்ள பிரசங்கம் மத்தேயு 5-7ல் உள்ள அதே மலைப்பிரசங்கமாக இருந்தது என்றால், இது அநேகமாக மலைப்பிரசங்கம் செய்யப்பட்ட அதே மலையாகவே இருக்கும் (மத். 5:1; லூக். 6:12, 17). கப்பர்நகூமுக்கு அருகில் ஒரு மலை உள்ளது, அது இப்போது பாக்கியங்களின் மலை என்று அழைக்கப்படுகிறது, அங்குதான் இவை நடை பெற்றிருக்கலாம். ஹாட்டின் ஹார்ன்ஸ் என்று அறியப்படுகிற மலையானது இன்னொரு சாத்தியக் கூறாக உள்ளது. [30]இது சீஷத்துவத்திற்கான இயேசுவின் அழைப்பில் இரண்டாம் படிநிலையாக இருந்தது.

[31]இயேசுவே ஒரு அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்டார், ஏனெனில் அவர் தேவனால் அனுப்பப்பட்டவராய் இருந்தார் (எபி. 3:1). “அப்போஸ்தலர்” என்ற சொற்றொடரின் பொதுவான கருத்தமைவிலான பயன்பாட்டின் பிற உதாரணங் களுக்கு அப். 14:14; ரோமர் 16:7; 2 கொரி. 8:23; பிலி. 2:25 ஆகியவற்றைக் காணவும். (இந்தக் கிரேக்க வார்த்தை சில இடங்களில் ''செய்தியாளர்''/''தூதர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). [32]பன்னிரு கோத்திரங்கள் மற்றும் பன்னிரு அப்போஸ்தலர்களுக்கிடையில் மறைமுகமாய் உணர்த்தப்படும் தொடர்பை மத்தேயு 19:28 மற்றும் லூக்கா 22:30 ஆகிய வசனங்களைக் காணவும். [33]இந்தப் புனைப் பெயரின் பயன்பாடானது அநேகமாக நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டிருக்கும். அவர்களின் புயல்போன்ற நிலைப்பாட்டினி மித்தம் இயேசு இவ்வாறு அவர்களை அழைத்திருப்பார் (லூக். 9:51-56; மாற். 9:38 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவின் செல்வாக்கின் மூலமாக இந்த நிலைப் பாடானது சேணமிடப்பட்டு மாற்றப்பட்டது. [34]''ஸ்கோரியோத்'' என்பது அநேகமாக “கீரியோத்திலிருந்து” என்ற அர்த்தப் படுகிறது, இது யூதாஸ் அந்த நகரில் இருந்து வந்ததைக் குறித்தது. (யோசு. 15:25ஐ வாசிக்கவும்.) கீரியோத் யூதேயாவில் இருந்தது. யூதாஸைத் தவிர எல்லா அப்போஸ்தலர்களும் கலிலேயாவில் இருந்து வந்தவர்கள் என்பது தெளிவு. [35]இந்த மனிதர்களில் சிலருக்கு மற்ற பெயர்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, தோமா “திதிமு” (“இரட்டையர்”) என்றும் அழைக்கப்பட்டார் (யோவா. 11:16). நமது பாடத்தில் நாம் இவர்களை அடையும்போது இவர்களைக் கண்ணோக்குவோம். [36]யாக்கோபுடன் அநேகமாக யோவான் இயேசுவின் முதல் சீஷர்களில் இருந்திருக்கலாம். [37]பற்தொலொமேயு என்பது யோவான் 1:45-51ல் குறிப்பிடப்பட்ட நாத்தான்வேலின் இன்னொரு பெயர் என்று பலர் நினைக்கின்றார்கள்.